LIBRARY
02 JUN 2008
Eastern University, Sri Lanka

# EASTERN UNIVERSITY SRI LANKA

## FIRST YEAR EXAMINATION IN FACULTY OF ARTS AND CULTURE

## EXTERNAL DEGREE 2005/06 (April 2008)

## CC 104: Management

**Answer any five questions** **Time: 03 Hours**

---

Q1 "முகாமைத்துவமானது நிறுவனத்தின் இலக்கினை பயனுறுதிமிக்கதாகவும், திறமையானதாகவும் அடைவதற்கு உதவுகின்றது."

a முகாமைத்துவம் என்ற பதத்திற்கு வரைவிலக்கணம் தருக.

(06 புள்ளிகள்)

b. முகாமைத்துவத் தொழிற்பாடுகளை சரியாக நடைமுறைப்படுத்துவதற்கு முகாமையாளர்கள் சிறந்த திறன்களை கொண்டிருத்தல் வேண்டும். அத்திறன்களை விபரிக்க.

(07 புள்ளிகள்)

c. ஊழியர்களின் பணிச் செயற்றிறனுக்கும் (Job Performance) அதிகாரத்திற்கும் (Authority) இடையிலான தொடர்பினை ஆராய்க.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

Q2 a. "சிறந்த திட்டமிடலானது பல பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்". சிறந்த திட்டமிடலில் காணப்படும் பண்புகளைக் குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

b. முகாமையாளர் ஒருவர் சிறந்த தீர்மானம் எடுக்கும் ஆற்றலை கொண்டிருக்க வேண்டும். தீர்மானம் எடுத்தலில் ஏற்படும் தடைகளை உதாரணங்களுடன் விளக்குக.

(07 புள்ளிகள்)

c. குழுத்தீர்மானம் எடுத்தல் எச்சந்தர்ப்பத்திலும் நிர்வாகத்திற்கு பொருத்தமாக அமையுமா? ஆராய்க.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

Q3 a. எல்லா நிறுவனங்களையும் நோக்கும் போது மனித வளம் என்பது ஓர் பொதுவான காரணியாகும். ஏனெனில் இது ஏனைய வளங்களுடன் ஒப்பிடும்போது ஈடற்ற இயல்புகளைக் கொண்டுள்ளது. இதனை நீர் ஏற்றுக்கொள்கின்றீரா? காரணம் தருக.

(06 புள்ளிகள்)

b. உள்வாரியான ஆட்சேர்ப்பு முறையானது பெரும்பாலும் நிறுவனங்கள்ால் விரும்பப்படுகின்றது. காரணம் தருக.

(07 புள்ளிகள்)

c. முகாமைத்துவ சவால்கள் என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது? உமது பல்கலைக்கழகம் எதிர்நோக்கும் சவால்களைக் குறிப்பிடுக.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

Q4 "திட்டமிடலும் கட்டுப்படுத்தலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய முகாமைத்துவ தொழிற்பாடுகளாகும்".

a. "திட்டமிடலின்றி கட்டுப்பாட்டினை மேற்கொள்ள முடியாது". இக்கூற்றினை விளக்குக.

(06 புள்ளிகள்)

b. குறைக்கட்டுப்பாடு காரணமாக ஒரு நிறுவனம் எதிர்கொள்ளும் விளைவுகளைக் குறிப்பிடுக.

(07 புள்ளிகள்)

c. பொதுவாக ஊழியர்கள் ஏன் மாற்றத்தினை எதிர்க்கின்றார்கள். நடைமுறையுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

Q5 a. இன்று காகிதங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் தொடர்பாடலைக் காட்டிலும் இலத்திரனியல் ஊடகங்களைப் பயன்படுத்தும் தொடர்பாடல் பெருமளவில் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. இதற்கான காரணங்களை உதாரணங்களுடன் விளக்குக.

(06 புள்ளிகள்)

b. சிறந்த தொடர்பாடல் செயன்முறையின் சிறப்பில்புகள் எவை.

(07 புள்ளிகள்)

c. "எல்லாத் தலைவர்களும் முகாமையாளர்கள் அல்ல, மேலும் எல்லா முகாமையாளர்களும் தலைவராக மாட்டார்கள்" விளக்குக.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

LIBRARY
02 JUN 2003
Eastern University, Sri Lanka

Q6 "காலத்துக்குக்காலம் விருத்தி செய்யப்பட்ட முகாமைத்துவ சிந்தனைகளே முகாமைத்துவக் கோட்பாடுகள் என்று அழைக்கப்படும்".

a. பழைமை வாய்ந்த கோட்பாட்டினது வகைகளையும் அதனது முக்கியத்துவத்தினையும் நடைமுறை உதாரணங்களுடன் விளக்குக.

(06 புள்ளிகள்)

b. நிறுவன சூழலினை விளக்கி அதன் இரு பெரும் பிரிவுகளிலும் உள்ளடக்கப்படும் காரணிகளை அடையாளம் காண்க.

(07 புள்ளிகள்)

c. நிறுவன கட்டமைப்பானது பல பிரிவுகள், பகுதிகளைக் கொண்ட ஒன்றாகும். இதனை தீர்மானிக்கும் காரணிகளைக் குறிப்பிடுக.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

Q7 a. "ஊழியர்களது திறமையானது தனியே அவர்களது ஆற்றலில் மட்டும் தங்கியிருப்பதில்லை, அவர்களது ஊக்கமும் மிகவும் வேண்டப்படுகின்றது. இக்கூற்றினை ஆராய்க.

(06 புள்ளிகள்)

b. சிறந்த ஊக்கப்படுத்தலானது கொண்டிருக்க வேண்டிய அம்சங்களைக் குறிப்பிடுக.

(07 புள்ளிகள்)

c. தொழில் சிறப்புத்தேர்ச்சி என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது? அதனது நன்மை, தீமைகளை குறிப்பிடுக.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

Q8 பின்வருவனவற்றை சுருக்கமாக விளக்குக.

a. ஜப்பானிய முகாமைத்துவம்
b. SWOT ஆய்வு Analysis
c. மாஸ்லோவின் படிமுறை அமைப்புத் தேவைக் கோட்பாடு.
d. உயர்ந்த மற்றும் தட்டையான ஒழுங்கமைப்பு (Tall & Flat Organization)

(05*4=20 புள்ளிகள்)